பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 04 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்கத்தில் முதற்கட்டமாக நடைபெற்ற தேர்தலில் 92 புள்ளி ஐந்து ஆறு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. பசுமை எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. பிஹார் சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

4. தில்லி, பீகார், சட்டிஸ்கர், ஹரியானா, சண்டிகர், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்குவங்கத்தில் முதற்கட்டமாக நடைபெற்ற தேர்தலில் 92 புள்ளி ஐந்து ஆறு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்ற வாக்குப்பதிவு ஒருசில சம்பவங்களைத் தவிர அமைதியாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜனநாயக திருவிழாவான இத்தேர்தலில் பெருவாரியான மக்கள் உற்சாகத்துடன் வாக்களித்து வந்ததாக அவர் மேலும் கூறுகிறார்.

இதனிடையே வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் வீடியோ பதிவுகளை முறையாக கையாள்வது குறித்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இந்த புதிய வழிகாட்டுதலின்படி வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவை முழுமையாக பதிவு செய்துள்ள உபகரணங்களை உடனடியாக கேமராவில் இருந்து அகற்றக் கூடாது என்றும், கண்காணிப்பு கேமராக்களை அகற்றுவதற்கு முன்னர் உரிய தேர்தல் அதிகாரியிடம் முறையான அனுமதி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக சட்டப்பேரவை தேர்தலில் **85** சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கு ஒரேகட்டமாக நடைபெற்ற தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வாக்குகள் பதிவாகி உள்ளன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வி வி பேட் கருவிக்கு வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு வாக்கும் எண்ணும் மையங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களில் சிசிடிவி கேமராக்கள் உள்ளிட்ட பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகம் மற்றும் மேற்குவங்கத்தில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்துள்ளது பாராட்டத்தக்கது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, அசாம், கேரளம், மேற்குவங்கம் மற்றும் புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் பதிவான வாக்குகள் மே **4**-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதனிடையே குஜராத் மற்றும் மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு காலியாக உள்ள தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நேற்று அமைதியாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை விரைவாக எட்டுவதற்கு உதவிடும் வகையில், இரசாயனங்கள் மற்றும் மருந்துகள் உற்பத்திக்கான குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தொழில்துறை தலைவர்களுடனான கூட்டத்தில் பேசிய அவர், இதற்கான உத்திசார் நடைமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உலக அளவிலான விநியோக கட்டமைப்பில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அப்போது அவர் சுட்டிக்காட்டினார்.

முறையற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்று திரு நட்டா தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழலில், ரசாயனங்கள், மற்றும் உரங்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்கான மாற்று வழிவகைகளை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

பசுமை எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நீடித்த சுற்றுச்சூழல் குறித்த தேசிய மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், 19 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

எஃகு, சிமெண்ட் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்சாலைகளில் கார்பன் பயன்பாட்டை குறைப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பசுமை எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாவதுடன், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கும் உதவிடும் என்று திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

நாடு முழுவதிலும் உள்ள துப்புரவுப் பணியாளர்களின் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் நீடித்த வாழ்வாதார மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில், எந்திரங்களைக் கொண்டு துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கான தேசிய செயல்திட்டத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

நாட்டில் மொத்தம் **90** ஆயிரம் துப்புரவுப் பணியாளர்கள் இருப்பதாகவும், அவர்களில் **87** ஆயிரத்து **37** பேருக்கு கவச உடைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், **76** ஆயிரத்திற்கும் அதிகமான பல்வேறு சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில், பெரிய மாவட்டங்கள் மற்றும் மாநகராட்சிகளில் உள்ள **753** அவசரகால மீட்டுக் குழுக்களுக்கு, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசின் உறுதியான நடவடிக்கைகளை இது எடுத்துக்காட்டுவதாக

உள்ளது என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் திரு வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, ஈரானில் உள்ள அனைத்து இந்தியர்களும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அந்நாட்டிற்கான இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் டெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற போக்குவரத்து சேவைகள் காரணமாக, ஈரான் நாட்டிற்குப் பயணிக்க வேண்டாம் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

அவை நடவடிக்கைகள் இன்று காலை 11 மணிக்கு தொடங்கிய உடன் சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் பிரேம்குமார் உரையாற்றுகிறார்.

இந்த சிறப்புக் கூட்டத்தில் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி தலைமையில் புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட அரசின் பெரும்பான்மையை நிரூபிக்கும் வகையில் அம்மாநில சட்டப்பேரவைசயில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

**243** உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவையில் தேசிய ஜனநாயக கூட்டணியில் **21** உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்த சட்டப்பேரவைக் கூட்த்தில் கொண்டுவரப்படும் நம்பிக்கை வாக்கெடுப்பு எவ்வித சிரமுமின்றி நிறைவேறும் என்று அம்மாநில துணை முதலமைச்சர் திரு. விஜயகுமார் சௌத்ரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லி, பீகார், சட்டிஸ்கர், ஹரியானா, சண்டிகர், மத்திய பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், விதர்பா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சல பிரதேசம், அசாம், மேகாலயா, மற்றும் இமயமலையை ஒட்டியுள்ள மேற்குவங்கம், சிக்கிம் உள்ளிட

பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கடலோர ஆந்திர பிரதேசம், இமாச்சலபி பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், லடாக், கர்நாடகா, ஒடிசா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

அல்ஜிரியா - ஸ்பெயின் இடையேயான கடற்பகுதியில், படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், சோமாலியாவைச் சேர்ந்த புலம் பெயர்ந்தோரில் 5 பெண்கள் உள்பட 17 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் குறித்து ஊடகங்களுக்கு அல்ஜீரியாவிற்கான சோமாலிய நாட்டுத் தூதர் திரு **Yusuf Ahmed Hassan** தெரிவித்துள்ளார்.

அல்ஜீரியாவின் மேற்கு கடற்பகுதியில் நேரிட்ட இந்த விபத்தில், ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த புலம் பெயர்ந்தோர் உயிரிழந்துள்ளதாக அல்ஜீரிய வெளியுறவு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

<<<<>>>>

வடகிழக்கு பிராந்தியங்களுக்கான வேளாண் மாநாடு லக்னோவில் இன்று நடைபெறுகிறது.

மத்திய வேளாண் அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் அத்துறைக்கான அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் வேளாண்துறையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயிர் சாகுபடியில் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உரங்களின் பய்னபாட்டை கட்டுப்படுத்துவது குறித்தும், கள்ளச்சந்தையில் உரங்கள் விற்பனை செய்வதை தடுப்பது குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெங்களப் பதக்கத்தை வென்றது.

கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், மகளிர் 50 மீட்டர் ரைபிள் பிரிவில், இந்தியாவின் Prachi Gaikwad தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 10 மீட்டர் ரைபிள் பிரிவில், இந்தியாவின் Naren Pranav Vanita Suresh வெங்களப் பதக்கம் வென்றார்.

---------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 103 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 207 ரன் எடுத்தது. சஞ்சு சாம்சன் அபாரமாக ஆடி 54 பந்துகளில் 101 ரன் எடுத்தார்.

இதனையடுத்து, 208 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மும்பை அணி 19 ஓவரில் 104 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Akeal Hosein 4 விக்கெட்டுகளையும், நூர் முகமது 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இன்று நடைபெறும் போட்டியில், பெங்களூரு அணி, குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி, இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

---------------

தாமஸ் மற்றும் உபர் கோப்பைக்கான இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று தொடங்குகிறது.

டென்மார்க்கில் நடைபெறும் இப்போட்டியில், இன்று நடைபெறும் ஆடவர் போட்டிகளில் இந்தியா - கனடா - வை எதிர்கொள்கிறது.

மகளிர் போட்டிகளில் இந்தியா இன்று டென்மார்க்-ஐ எதிர்கொள்கிறது.

---------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், எர்ணாகுளத்தில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கேரளா அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**